அமைச்சின் சுற்றறிக்கை இல. 1995/01

எனது இல. 3/ பாஆபி/ஆக
தேசியப் பாடசாலைகளும் ஆரம்பக் கல்விப் பிரிவும்,
கல்வி உயர்கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.
1997.10.27

சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
கோட்டத்துக்குப் பொறுப்பான பிக. பணிப்பாளர்களுக்கும்,

## ஆண்டு 3 இற்கான புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் - 1995

01. தேசியக் கல்வி நிறுவகத்தின் ஆரம்பக்கல்விப் பிரிவினால் தயாரிக்கப் பட்டதும் அந்நிறுவகத்தின் நிர்வாக சபையினரால் சிபார்சு செய்யப்பட்டு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுமான ஆண்டு 3 இற்கான புதிய பாடத் திட்டமானது 1995 ஜனவரி மாதம் முதல் நாடெங்கனும் உள்ள சகல சிங்கள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

02. அதற்காகத் தயவு செய்து கீழ்க்கண்ட விடயங்களில் உங்களது விசேடகவனத்தைச் செலுத்துக.

i. தேசியக் கல்வி நிறுவகத்தினால் பயிற்சி வழங்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களது உதவியைப் பெற்று இப் புதிய பாடத்தினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக ஆண்டு 3 இற்குரிய ஆசிரியர்களுக்கு அறிவூட்டல்.

ii. தேசியக் கல்வி நிறுவகத்திலேயுள்ள வெளியீட்டுத் திணைக்களத்தினால் தங்கள் மாகாண இணைப்பதிகாரியினூடாக அனுப்பி வைக்கப்படும் பாடத்திட்டப் பதிப்புப் பிரதிகளைப் பாடசாலைகளுக்கு விநியோகித்தல்.

iii. ஆண்டு 3 இற்கான வகுப்புக்களில் கல்வி கற்றற் செயற்பாட்டு முறைகளிலே அவ்வப்பாடப்பரப்பும் செயன்முறைகளும் தனித்தனியே வாரமொன்றுக்கு ஒதுக்கப்படவேண்டிய சகல அளவுந் தொடர்பான ஆலோசனைகளை அதிபர்களுக்கு அறிவித்தல்.

iv. ஆங்கில பாடந்தவிர்ந்த ஏனைய சகல பாடங்கள் தொடர்பாகக் கற்பித்தற்கு ஓர் ஆசிரியரையே நியமித்தல்ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் நற்பண்புகளை மேலும் விருத்தியாக்குதல் என்பன தொடர்பாக அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆலோசனைகள் வழங்குதல்.

03. ஆண்டு 3 இற்கான பாடநேரப்பகிர்வு கீழே தரப்பட்டுள்ளது :

| பாடப்பரப்பு | | வாரத்துக்கான நேரம் மணி | நிமிடம் |
|---|---|---|---|
| 01. | சமய அனுட்டானங்களும் காலைக் கூட்டமும் ( நாடோறும் 15 நிமிடங்கள் வீதம்) | 01 | 15 |
| 02. | உடற்கல்வி (கூட்டத்தின் பின்னர் நாடோறும் 15 நிமிடங்கள் வீதம்) | 01 | 15 |
| 03. | ஓய்வு நேரம் (நாடோறும் 20 நிமிடங்கள் வீதம் ) | 01 | 40 |
| 04. | சமய நெறி கற்றல் | 01 | 45 |
| 05. | மொழிவிருத்தி (தாய்மொழி) | 04 | 40 |
| 06. | கணிதச் செயற்பாடு | 04 | 40 |
| 07. | ஆங்கில மொழி கற்றல் | 02 | 55 |
| 08. | நாமும் அண்மைச் சூழலும் பற்றிக் கற்றல் நடவடிக்கை | 03 | 20 |
| 09. | ஆக்கத் தொழிற் செயற்பாடுகள் | 01 | 45 |
| 10. | கவின் கலைக் கல்வி | 01 | 45 |
| | முழு நேரம் | 25 | 00 |

04. இப்பாடத்திட்டமானது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதற்கும் ஆரம்பக் கல்சிவின் தரத்தினை மேலும் உயர்த்துவதற்கும் தாங்கள் நல்மும் ஒத்துழைப்பைப் பெரிதும் மதிக்கிறேன்.

கமலா விக்ரமசிங்ஹ,
மேலதிகச் செயலாளர் (பொதுக்கல்வி)
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

ஒ / இ. எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,